மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 50/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மாதையன் | நாள் | 20.08.2024 |
| தகப்பனார் பெயர் | பொன்னப்பன் | | |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

10) பிரதிவாதியின் நிலம் என்னுடைய நிலத்திலிருந்து தெற்குபுறமாக அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி பிரதிவாதி நிலமானது, 4 அடி பள்ளத்தில் அமைந்துள்ளது என்றால், சரிதான். சிறிது பகுதி சமமாகவும் உள்ளது. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அளந்து, அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆணையர் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் தென்வடலாக காட்டப்பட்டுள்ள சாலையை ஒட்டி கிழபுறமாக 13.6 மீட்டர் நீளத்தில் அமைந்துள்ள பகுதியை தான் நான் சமமாக உள்ளது என சொல்கிறேன் என்றால், சரிதான். மேற்படி 13.6 மீட்டர் பகுதியில் பலவகை மரங்களும், பாறைகளும் உள்ளன என்றால், சரிதான்.

11) தற்போது என்னிடம் காட்டப்படும் சர்வேயர் வரைபடத்தில் சிவப்பு வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ள பகுதிக்கு தெற்கே அமைந்துள்ள ச.எண்.37/3B ஆனது, பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலம் என்றால், சரிதான். மேற்படி எனது நிலத்திற்கு தெற்கில் அமைந்துள்ள பிரதிவாதியின் நிலத்தையும் பிரிக்கும் வகையிலும், 4 அடி உயரத்தில் கல்கறை அமைந்துள்ளது என்றால், சரிதான்.

12) மேற்படி சமமாக அமைந்துள்ள பகுதியில் பாறையை தவிர்த்து, மீதமுள்ள பகுதிகளில் பிரதிவாதி விவசாயம் செய்து வருகிறார் என்றால், சரிதான். என்னுடைய நிலத்திற்கு வடமேற்கு பகுதியில் அன்னபூரணி அம்மாள் என்பவரது நிலம் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி அன்னபூரணி அம்மாள் நிலத்தை ஒட்டியவாறு என் நிலத்தின் மேற்கு புற எல்லையில் எனது வீடு அமைந்துள்ளது

என்றால், சரியல்ல. மேற்படி என் நிலத்தில் மேற்கு எல்லையை ஒட்டி மேற்படி அன்னபூரணி அம்மாளின் வீடு அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி அன்னபூரணி அம்மாள் அவரது வீட்டிற்கு வடபுறத்தில் அமைந்துள்ள மேற்படி தென்வடல் ரோட்டிலிருந்துதான் தன் வீட்டிற்கு செல்ல இயலும் என்றால், சரிதான்.

13) மேற்படி தென்வடல் ரோட்டிலிருந்து ச.எண்.37/3A. ச.எண்.37/3B, ச.எண்.37/3C ஆகிய நிலங்களுக்கு ச.எண்.37/2C ல் உள்ள வழித்தடத்தை தவிர தற்போது வேறு வழித்தடம் உள்ளதா என்றால், இல்லை. ஆனால், இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வண்டித்தடம் இருந்தது. அவ்வாறு முன்பு வண்டி தடம் இருந்தது என்பதை காண்பிக்க ஏதேனும் ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். தொடக்கத்தில் அவ்வாறு வண்டித்தடம் இருந்ததை காண்பிக்க புகைபடமோ அல்லது வரைபடங்களோ தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால், மேற்படி சொத்தை விற்பனை செய்தவர் 0.01 சென்ட் நிலத்தை தடவழிப்பாத்தியத்திற்காக விட்டுதான் விற்பனை செய்துள்ளார்.

14) அவ்வாறு என்னுடைய உரிமை ஆவணத்தில் ஏதேனும் 0.01 சென்ட் நிலம் தடவழிக்காக உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. என் பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்திலாவது அவ்வாறு மேற்படி நான் சொல்லும் தடவழிக்குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், குறிப்பாக எழுதப்படவில்லை. ஆனால், பொதுவாக மாமூல் வழித்தடம் உள்ளதாக எழுதப்பட்டுள்ளது. பொதுவாக மாமூல் வழித்தடம் என ஒரு ஆவணத்தில் எழுதப்பட்டிருந்தால், மேற்படி சொத்தின் நான்குபுறத்திலிருந்தும் செல்வதற்கு உள்ள எந்த வழித்தடத்தையும் குறிக்கும் என்றால், சரிதான்.

15) நான் சொல்வதுபோல் அவ்வாறு எந்த வழித்தடமும் இல்லாததால் தான் குறிப்பிட்டு என் ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால், சரியல்ல. தாவா வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ச.எண்.37/3A ல் உள்ள சொத்திற்கு மேற்படி அதே

சர்வே எண்ணில் தான் தடவழி உள்ளதாக நான் குறிப்பிட்டுள்ளேனே தவிர பிரதிவாதியின் நிலத்தில் தடவழி உள்ளதாக நான் குறிப்பிடவில்லை என்றால், சரிதான்.

(பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/—திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.